தினமணி

# சுதந்திர தின வைர விழா மலர்

இந்தியா 60



தினமணி
சுதந்திர தின வைர விழா மலர்
15-08-2007

## எங்கள் உணர்வுடன் கலந்த 'தினமணி' வாசகர்களுக்கு



இந்திய அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு அறுபது ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

இந்தியர்களால் சுதந்திரத்தைக் காப்பாற்ற முடியுமா? சுதந்திரமாக இயங்கும் தகுதியும் செயல்திறனும் அவர்களுக்கு உண்டா? ஒருமைப்பாடான ஒரு நாடாக இந்தியாவால் இருக்க இயலுமா? கல்வியறிவில்லாத மூடர்களும், மூடநம்பிக்கைகளில் மூழ்கிய பழமைவாதிகளும் நிரம்பிய இந்தியாவால் நவீன உலகத்தில் நடைபோடுவது நடக்கிற காரியமா? - இப்படி எத்தனை எத்தனை கேள்விகள், கேலிகள், ஏளனங்கள், சந்தேகங்கள். அத்தனையும் இன்று பொய்த்துவிட்டனவே.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு சுதந்திரம் பெற்ற சுமார் நூற்று எண்பது நாடுகளில் விடாப்பிடியாக மக்களாட்சித் தத்துவத்தைக் கைவிடாமல் தொடர்ந்து நடைபோடும் ஒரே நாடு இந்தியாதான். ஒரே ஒரு வாக்கில் நாடாளுமன்றத்தில் நம்பிக்கைத் தீர்மானம் தோற்ற போது, நேராகக் குடியரசுத் தலைவர் மாளிகைக்குத் தனது ராஜிநாமா கடிதத்துடன் தான் இந்தியப் பிரதமர் ஒருவர் விரைந்தாரே தவிர, ராணுவத்தைத் துணைக்கு அழைக்கவில்லை. இங்கே மக்களாட்சித் தத்துவம் வேரூன்றி இருப்பதற்கு இதைவிட ஓர் எடுத்துக்காட்டு தேவையில்லை.

வளர்ச்சி பெற்றிருக்கிறோம். முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். உலகச் சந்தையில் போட்டிபோடும் அளவுக்கு நமது பொருளாதாரம் வளர்ச்சி அடைந்திருக்கிறது. மேலை நாடுகளே அதிசயப்படும் அளவுக்கு நமது அந்நியச் செலாவணி இருப்பு அதிகரித்திருக்கிறது. வாஷிங்டன்வாசி அனுபவிக்கும் சுகத்தை இங்கே சந்தவாசியிலும் அனுபவிக்கும் அளவுக்கு ஒரு முன்னேற்றம். அணுகுண்டு சோதனை நடத்துகிறோம். ஆகாய விமானத்தில் பறக்கிறோம்.

ஒருபுறம் பிரமிக்கத்தக்க வளர்ச்சி. மற்றொருபுறம் மிகப் பெரிய வறட்சி. இன்னமும் அத்தனை இந்தியர்களுக்கும் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், செய்யத் தொழில் போன்ற அடிப்படைத் தேவைகளைச் செய்து கொடுக்க முடியவில்லை. அடிப்படை வசதிகளான குடிதண்ணீர், ஆரம்ப சுகாதார நிலையம், ஆரம்பப் பள்ளி மற்றும் போக்குவரத்து வசதிகள் அத்தனை கிராமங்களையும் சென்றடைந்தபாடில்லை.

ஆனால், வருங்காலம் ஒளிமயமாகத் தெரிகிறது. அறுபது ஆண்டு சாதனைகள் மனதிற்குத் தெம்பையும் எதிர்பார்ப்பையும் அளிக்கின்றன.

வைர விழா ஆண்டில் கணக்கெடுத்துப் பார்த்தால், அடைய நமக்கிருக்கும் சோதனைகளைவிட நமது சாதனைகள் அதிகமாகவும் வளமாகத் தெரிகிறது. சுதந்திர நூற்றாண்டு விழாவில், உலக வல்லரசாக இருக்கப் போவது நமது இந்தியாதான் என்கிற நம்பிக்கை நிறையவே இருக்கிறது.

இந்திய சுதந்திரத்தின் வைர விழா ஆண்டு என்று சொன்னால், தினமணி நாளிதழ் மலர் வெளியிடாமல் எப்படி இருக்க முடியும்? சுதந்திரப் போராட்டத்துடன் பின்னிப் பிணைந்து, போராட்ட வேள்வியில் உருவான சுதந்திரப் போராளியான நமது 'தினமணி' நாளிதழ். அதனால், இந்த சுதந்திர வைர விழா மலரை பாரத தேவியின் பொற்பாதக் கமலங்களுக்குக் காணிக்கையாக சமர்ப்பிக்கிறோம்.

வந்தே மாதரம்!

அன்புடன்

ஆசிரியர்

15.8.2007
தினமணி இணைப்பு
இன்டர்நெட் முகவரி
http://www.dinamani.com
Supplement to Dinamani
RNI Reg. No. [illegible]
Postal Reg. No. TN/ARD/12/06-08

மலர் தயாரிப்பு:
ஆசிரியர் கே. வைத்தியநாதன்
தயாரிப்பில் உதவி:
முத்தையா வெள்ளையன்
கோ. குமரன்

வடிவமைப்பு:
ஜே. மோகன்

பக்க வடிவமைப்பு:
ம. மணிவண்ணன்

# VASANTH

ENTERTAINMENT & NEWS SATELLITE CHANNEL




நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினரும், தமிழக வர்த்தகர் காங்கிரஸ்
தலைவருமான H.வசந்தகுமார் தொடங்கியிருக்கும்
'வசந்த் டி வி' க்கு வாழ்த்து தெரிவிக்கிறார்
அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் அன்னை சோனியா காந்தி